(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 22.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஓகத்து 20, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0071 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறையாக்கல் ஆணைக்குழுவினால் (TRCSL) கடந்த 02 வருடங்களில் வழங்கப்பட்ட எல்லா வானொலி அலைவரிசை (தொகுதிகளின்) விபரங்களை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வானொலி அலைவரிசை (தொகுதிகள்) உரிமங்கள் அரசாங்க ஆதனங்களை வழங்குவதற்கு விதித்துரைக்கப்பட்ட அரசாங்க கேள்விப்பத்திர நடவடிக்கை முறைகளின் பிரகாரம் வழங்கப்பட்டனவா என்பதையும்; அத்துடன்,

(ii) ஒவ்வொரு அலைவரிசை (தொகுதிகள்) உரிமத்தையும் வழங்கியதன் மூலம் திரட்டப்பட்ட வருமானங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0178 / '09

2.

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— விளையாட்டுத்துறை, பொதுப்பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எமது நாட்டில் தற்போதுள்ள விளையாட்டுத்துறை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த பாடசாலைகள் வெவ்வேறாக மாகாண சபைகளுக்கு அல்லது மத்திய அரசாங்கத்துக்கு உரித்தாகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கல்வி அமைச்சினால் இந்த விளையாட்டுத்துறை பாடசாலைகளின் அபிவிருத்திக்காக விசேட திட்டம் ஏதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அல்லாவிடில், வேறு ஏதேனும் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் அவ்வாறான திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அந்த திட்டங்கள் எது என்பதையும்,

(iv) அந்த ஒவ்வொரு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுத்துறை பாடசாலைகள் எவை என்பதையும்,

(v) குறிப்பிட்ட பாடசாலைகள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0182 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மிஹின் எயார் விமானக் கம்பனி எப்போது தாபிக்கப்பட்டது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மிஹின் எயார் விமானக் கம்பனியின் தலைவரின் பெயர், முகவரி மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட தலைவர் இப்பதவிக்கு யாரால் நியமிக்கப்பட்டார்;

(ii) அது எப்போது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0282 /'09

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யப்பானிய வெளிநாட்டு பொருளாதார சேவைகள் நிதியத்தினால் ரூபா. 256,914,765/= செலவிடப்பட்டு புகையிரத வீதிகள் புனரமைப்புக்கான கருத்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட அம்பேபுஸ்ஸ கல் உடைத்தல் கருத்திட்டத்தின் இயந்திரங்கள் மன்றும் பொறித்தொகுதிகள் செயலிழந்த தனால் 2007 ஆம் ஆண்டு 253 நாட்கள் உற்பத்தி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்து இருந்தது என்பதையும்,

(ii) இதன்படி 2007 இல் உற்பத்தி இலக்குகளில் 34% அளவு மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) எனவே, ரூபா 33,808,358/= பெறுமதியான கருங்கற்களை வெளிவாரி நபர்களிடமிருந்து கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய நிலைமையின் கீழ் குறிப்பிட்ட கருத்திட்டத்தினால் 2007 இல் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் பிரயாணச்செலவு கொடுப்பனவுக்காக ரூபா. 4,457,356 செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அதன்படி, உற்பத்தியின் அளவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தல் தொடர்பாக முரண்பாடுகள் இருப்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0367 / '09

5.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(ii) 2008 ஆம் ஆண்டு வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எத்தனை,

(iii) இவர்களின் முழுப்பெயர் தனிப்பட்ட முகவரி, கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் ஆகியவை யாவை,

(iv) தற்போது இப்பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு கலந்து கொள்ளும் பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது,

(v) ஒரு பணிப்பாளர், பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்ளாமைக்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0382 / ' 09

6.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அரசாங்கம் / இலங்கை மத்திய வங்கி கடந்த 2 ஆண்டு காலப்பகுதியில் தனியார் வங்கிகளிலிருந்து கடன் பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி கடன் பெறப்பட்ட வங்கிகளும், பெறப்பட்ட கடன் தொகையும் யாதென்பதையும்,

(ii) மேற்படி கடன் தொகையும், அதற்கான வட்டியும் செலுத்தப்பட வேண்டிய கால எல்லை யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் நிதி நிர்வாகம் பற்றிய அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளதால் மேற்படி தனியார் வங்கிகளிலிருந்து குறிப்பிட்ட கடன்களைப் பெறுவதற்காக பாராளுமன்றத்தின் அனுமதி பெறப் பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இல்லையெனில், மேற்படி கடனைப் பெறுவதன் மூலம் இலங்கையின் அரசியலமைப்பு மீறப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0528 / '09

7.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பாடசாலைகளில் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்வதில் கடைபிடிக்கப்பட்ட விதி முறை என்ன என்பதையும்,

(ii) ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின்படி ஒரே தகமையை பூர்த்தி செய்துள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு இரண்டு மாகாணங்களில் இரண்டு வகையான நியமனங்கள் எவ்வாறு வழங்கப்பட்டன என்பதையும்,

(iii) அதனை நிவர்த்தி செய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆசிரியர் உதவியாளர்களை ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளாமல், ஆசிரியர் பயிற்சிக்காக அரச ஆசிரியர் கலாசாலைகளில் சேர்த்து கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு வழங்கலாம் என்பதையும்,

(ii) ஆசிரியர் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் 3000./= ரூபா கொடுப்பனவு ஆசிரியர் கலாசாலையில் கல்வி நடவடிக்கைகளுக்கும் போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0073 / ' 09

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பாராளுமன்றத்தால் குறித்துரைக்கப்பட்ட கடன் பெறுகைகளுக்கான உச்ச வரம்புகளை 1948 இல் இருந்து 2000 வரைக்கும், 2000 இல் இருந்து 2005 வரைக்கும் 2006, 2007, 2008, 2009 ஆகிய ஆண்டுகளுக்கு தனித்தனியாகவும் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இக்காலப்பகுதிகளில் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் கடனாகப் பெறப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2005 — 2009 காலப்பகுதியில் மேலதிக செலவுகளை ஈடுசெய்ய ஈட்டப்பட்ட அரசாங்க வருமானத்தை ஆண்டு வாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0218 / '09

9.

கௌரவ பேமசிறி மானகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்தாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எந்தத் திகதியில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பிரகாரம் மேற்படி விஜயத்தை மேற்கொண்டாரா என்பதை அவர் இச்சபைக்குக் கூறுவாரா?:

(இ) (i) இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தை நடத்திய தரப்புகள் மற்றும் அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) அது எத்திகதிகளில் என்பதையும்,

(iii) இந்திய வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடிய விடயங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0283 / '09

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 யூலை மாதம் 14 ஆம் திகதிய 11/ 2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் படி தனிப்பட்ட விடயங்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்களை பாவிக்க உரிமையற்ற புகையிரத திணைக்களத்தின் 16 உத்தியோகத்தர்கள் 2007 ஆம் ஆண்டு அறிக்கையின் படி வாகனங்கள் பாவிப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய உத்தியோகத்தர்கள் யார் என்பதையும்,

(ii) பாவிக்கப்படும் வாகனங்கள் மற்றும் அவற்றின் பதிவு இலக்கங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0368 /'09

11.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிருவாகப் பலவீனங்கள் காரணமாக 2008 ஆம் ஆண்டு முதல் அது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் நிருவாகத்திலிருந்து மீண்டும் அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் அகற்றப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நிருவகித்த காலகட்டத்தில் கூட்டுறவுச் சங்கம் இலாபம் ஈட்டிய சந்தர்ப்பங்கள் எத்தனை,

(ii) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் நிருவாகத்திலிருந்து அரணாயக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை அகற்றுவதற்கான காரணம் யாது

என்பதை அவர் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0509 / '09

12.

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்கள் இப்போது தங்கியுள்ள முகாம்கள் யாவையென்பதையும்,

(iii) ஒவ்வொரு முகாமிலும் உள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் மீளக் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்கள் எப்பிரதேசங்களில் குடியேற்றப்பட்டார்கள் என்பதையும்,

(iii) அடிப்படைத் தேவைகளும் உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்பட்ட பின்னர் இவர்கள் குடியேற்றப்பட்டார்களா என்பதையும்,

(iv) மீளக் குடியேற்றுவதற்கான துரித நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0074 / ' 09

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2000 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்கான

(i) மொத்த உண்ணாட்டு உற்பத்தியையும் (GDP) அதன் வளர்ச்சி வீதத்தையும்,

(ii) மொத்தக் கடன் மற்றும் தலா கடன் என்பவற்றையும்,

(iii) தொழிற் படையணி மற்றும் பணவீக்கத் தரவுகள் என்பவற்றையும்

வருடாந்த அடிப்படையில் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0219 / ' 09

14.

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகளினதும், சிற்றுண்டிச் சாலையுடனான வண்டிகளினதும் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி புகையிரதப் பெட்டிகளும், சிற்றுண்டிச்சாலையுடனான வண்டிகளும் இந் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட திகதிகள் மற்றும் பயன்படுத்தப்படாமலுள்ளவற்றின் எண்ணிக்கை யாவையென்பதையும்,

(iii) இவற்றின் நிதிப் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*2.

இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*8.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*12.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*26.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*27.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

28.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

32.

செரண்டிப் கல்வி நம்பிக்கை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

எதிர்கால உலக ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.